பெயர் : ______________________ வகுப்பு : __________________

<u>கதையில் விடுபட்ட இடத்திற்கு ஏற்ற சரியான சொற்க¨ளத் தெரிவு செய்க.</u>

## அமைதி காத்த இளங்கோ

ஐந்தாம் ஆண்டில் படிக்கும் வாமனன் மிகவும் ________ சக மாணவர்களோடு ஒப்பிடுகையில் அவன் எல்லாப் பாடங்களிலும் சிறந்து விளங்கி வந்தான். பள்ளியில் ஆசிரியர் மற்றும் மாணவர்களிடையே அவனுக்குத் தனி மதிப்பும் மரியாதையும் இருந்தது. ஆகையால், அவனுக்குத் ________ தலைதூக்க ஆரம்பித்தது.

ஒருநாள், வாமனனின் வகுப்பிற்கு இளங்கோ என்ற மாணவன் மாற்றலாகி வந்தான். அவனிடம் ________ மிகுந்திருந்தது. இளங்கோவிடம் பழக வரும் மாணவர்களைத் தடுக்கலானான் வாமனன். வகுப்பில் ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்குத் தான் மட்டுமே பதிலளிக்க வேண்டும் என்ற பழக்கமுடைய வாமனன், சில வேளைகளில் இளங்கோ பதிலளிக்கும்போது அவனை எள்ளி ________. ஆனால், இளங்கோ அதனைப் ________. அமைதி காத்துத் தன் திறமையை நிருபிக்க சரியான தருணத்திற்குக் காத்திருந்தான்.

ஆண்டிறுதித் தேர்வு நெருங்கிக் கொண்டிருந்தது. வகுப்பில் மாணவர்கள் அனைவரும் ________ செய்து வந்தனர். வாமனன் மட்டும் தன் திறமையின் மீது அதிக ________ கொண்டிருந்ததால் சரியான முறையில் மீள்பார்வை செய்யவில்லை. தானே எல்லாப் பாடங்களிலும் அதிகப் புள்ளிகள் பெறுவோம் என்று அலாதி நம்பிக்கை கொண்டிருந்தான்.

ஆண்டிறுதித் தேர்வும் ________. மாணவர்கள் முடிவிற்காகக் காத்திருந்தனர். இளங்கோவின் திறமையை அறியாது தவறான எண்ணங்கொண்டிருந்த வாமனனுக்குப் பெரும் ________ காத்திருந்தது. எல்லாப் பாடங்களிலும் இளங்கோ வாமனனைவிட அதிகமான புள்ளிகள் பெற்று வகுப்பிலேயே முதல் நிலையில் இருந்தான். அடக்கமாயிருந்த இளங்கோவின் வலிமையை அறியாது, எள்ளி நகையாடியதை எண்ணி வருந்தினான். அப்போதுதான் அவன் கற்ற ________ நினைவிற்கு வந்தது.

'அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஓடுமீ னோட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு.'

| | | | | |
|---|---|---|---|---|
| பொருட்படுத்தமாட்டான் | தற்பெருமை | அதிர்ச்சி | தன்னடக்க | நம்பிக்கை |
| மூதுரை | முடிவுற்றது | நகையாடுவான் | மீள்பார்வை | திறமைசாலி |

LIVEWORKSHEETS